# இனிமை இல்லம்



" எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே ....... அவர் நல்லவராவதும்
தீயவராவதும் அன்னை வளர்க்கையிலே ! "

## குடும்பக் காலாண்டிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிமை இல்லம்

இல்லம் : 8 , யூலை 2012 , இனிமை : 11

இறையியலின் பின்னணியில்
இல்லங்களுக்கு இனிமை சேர்க்கும்
ஒரு குடும்ப காலாண்டிதழ்

தொகுப்பாசிரியர் :-
தா.பி.சுப்பிரமணியம்

வெளியீடு :-
குடும்ப பணிக்குழு
திருகோணமலை மறைக்கோட்டம்
மேய்ப்புப் பணி நிலையம்
உப்புவெளி , திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி உணர்த்தும் அறிவுப் பாடம்!

இது ஆடி மாதம். ஆடி என்றதும் கிறீஸ்துவர்களாகிய எமது மனக்கண் முன்னே ஓர் இல்லத்தின் இனிய காட்சி விரியும்.

அதுதான் கன்னிமரியாளின் சிறு பராயத்திலே, அவளை அருகில் அணைத்துக்கொண்டு அவளது தாயார் அன்னம்மாள் புத்தகம் விரித்து பாடம் நடத்துவதுபோன்ற ஒரு காட்சி.

அந்தப்பாடம் இறைவனைப்பற்றியதாக இருக்கும். அவர் மகிமையை புகழ்வதாக இருக்கும், அன்பு, பண்பு, ஒழுக்கம், பிரார்த்தனை, விருந்தோம்பல் பற்றியதாகவும் இருக்கும், அந்தப்பாடங்கள் மரியாளை மரபு வழியான சிறந்த குடும்பவாழ்வுக்கு மட்டுமல்ல, இறைமகனே அவள் வயிற்றில் வந்துதித்து, இரட்சிப்பின் புதிய சகாப்தத்தை தொடக்கிவைக்க கால்கோளாக அமைந்தது.

புனித அன்னம்மாள் தன் கணவர் சுவைக்கீனோடு இணைந்து வாழ்ந்த குடும்பத்திலிருந்து வந்தவள் தான் மரியாள். அவளது இளமைக்கால வாழ்க்கையும் குடும்பவாழ்க்கையும் இறை விசுவாசத்திலும் நிறை அன்பிலும் ஊன்றி நின்றதற்கு அவளது பெற்றோரே காரணமாயிருந்தனர்.

புனித அன்னம்மாள் காலத்து பழமைவாத சூழல் இன்று உலகிலில்லை. கட்டுப்பாடுகளில்லை, உலகம் விரிந்து விட்டது, பற்பல நாகரீகங்கள், கலாசாரங்கள் வந்து கலந்து குடும்பங்களில் உண்மையான அன்பை, பண்பை, நேசத்தை, ஒட்டுறவை காண முடியாமல் செய்துவிட்டன. ஒழுக்கம், புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு பரித்தியாகம் என்பன கிறீஸ்துவத்தின் தனித்துவத்தை இன்றுவரை காத்து வருகின்றன. எது எப்படியிருப்பினும் பிள்ளை வளர்ப்பு இப்படித்தான் இருக்க வேண்டுமென்பதற்கு எமக்கு கண்கண்ட சாட்சியாக புனித அன்னம்மாள் விளங்குகிறாள். அதற்காகவே அவள் திருநாளை இம்மாதத்தில் கிறிஸ்துவம் வாழும் நல்லுலகமெங்கணும் கோலாகலமாக கொண்டாடுகிறோம். குடும்பங்களில் சதா சண்டை சச்சரவுகளில் ஈடுபடுவோர், பிரிவினை வாதம் பேசுவோர், தான்தோன்றித்தனமாக முடிவுகள் எடுப்போர், அவ்விதம் முடிவுகட்டு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முன் புனித அன்னம்மாள் படிப்பிக்கும் காட்சியை ஒரு கணம் நினைத்துப்பார்க்கட்டும்! அவள் வாழ்ந்த அந்த இனிமை இல்லத்தை -இல்லறத்தை நினைவு கூரட்டும்!

**என்றென்றும் அன்புடன்**

**அருட்தந்தை அன்ரனி லீயோ,**

**இணைப்பாளர்.**

**குடும்பவாழ்வுப் பணித்துறை.**

**மேய்ப்புப்பணி நிலையம்.**

**உப்புவெளி.**

**திருகோணமலை.**

## இல்லம் இனிமை பெற ..........

இல்லங்களின் கூட்டுச்சேர்ப்பே உலகமாகும். எனவே உலகம் உய்வை அடைய – மேன்மை அடைய இல்லங்களின் உயர்ச்சி மிகவும் அவசியமாகும்.

இன்று நாம் காணும் இல்லங்களில் பெருமளவு இனிமை காணப்படவில்லை என்பது அனுபவஸ்தர்களின் அங்கலாய்ப்பு ஆகும் இந்த நிலைக்குக் காரணம் யார்?

இந்த வினாவுக்கு ஒட்டு மொத்தமாக விடை அளிப்பதானால், நானும் நீங்களுமே காரணமாகும். இப்படிக் கூறுவது குறித்து நீங்கள் ஒருவேளை ஆச்சரியப்படலாம்..

ஆனால்....அதுதான் உண்மை.

எம்மில் பெரும்பாலோர் எமக்கு எல்லாமே தெரியும் என்ற மனப்போக்கில் வாழ முற்படுவதோடு, மற்றவர்களின் ஆலோசனையை - அறிவுரையை ஏற்கத் தயங்குகிறோம்.
இதுவே இனிமை காணப்படாததற்கு அடிப்படை காரணமாகும்.

முன்னைய காலங்களை விட இன்று எம்மைச் சுற்றிக் காணப்படும் "தொடர்பு சாதன வசதிகள்" எமக்கு பல விடயங்களைத் தாமாகவே கற்றுத்தர முயற்சிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் நாம் அதனைக் கற்க வேண்டும் - அறிய வேண்டும் என்ற மனநிலை கொள்ளாமல், நாம் தான் 'அதனைக் கற்பிக்க வேண்டும் என்று சிந்திக்கிறோம் - முடிவு கொள்கிறோம்.

கற்றது கை மண் அளவு என்று முதுமொழி கூறுகின்றது எனவே, இல்லத்தின் பிரதான நாயகர்களாக, விளங்கும் கணவன் - மனைவி என்போர், ஏற்கனவே கல்வி ரீதியிலும் அனுபவ ரீதியிலும் கற்றுக் கொண்டவற்றை அடிப்படையாகக் கொண்டு, அவ்வப்போது தாங்கள் பெறும் அனுபவத்தின் மூலமும் ஏனையோரின் அனுபவத்தின் மூலமும் பெறும் நன்மையானவற்றை கடைப்பிடித்து செயலாற்ற முயற்சிப்பது இல்லறம் மேலும் இனிமை பெற வழிவகுப்பதாகும்.

இல்லறத்தில்,கணவன் மனைவி என்போர் ஒருவர் ஒருவரைப் புரிந்து கொண்டு விளங்கிக் கொண்டு செயலாற்ற முனையும் போது குடும்பம் குதூகலம் அடையும் என்பதில் எள்ளத்தனையும் சந்தேகமில்லை.

- இல்லம் இனிமை பெற இதுவே இலகுவான வழி !

— சு.பிதா —

## முதன்மை பெறும் அருட்சாதனம் எது?

திருச்சபை எமக்கு ஏழு அருட்சாதனங்களை அறிமுகப் படுத்தி உள்ளமை அனைவரும் அறிந்ததே.

ஞான முழுக்கில் ஆரம்பித்து நோயிற் பூசுதலில் முடிவடையும் இந்த அருட்சாதனங்களில் 'திருமணம்' என்பதும் ஒன்றாகும்.

அறிமுகப்படுத்தப்பட்ட அத்தனை அருட்சாதனங்களுக்கும் காரணியாக நின்று முதன்மை ஸ்தானத்தைப் பெறுவது 'திருமணம்' என்கிற அருட்சாதனமே என்று கூறினால் அது மிகையாகாது.

ஆமாம்! திருமணம் என்ற அருட்சாதனத்தின் வழியாக இணையும் ஆணும் பெண்ணும் தாம்பத்திய வாழ்வின் எதிரொலியாக தமக்கு வாரிசுகளைப் பெற்றுக் கொள்கின்றனர். இவ்வாறு பெற்ற வாரிசை திருச்சபையோடு இணைய — அதன் உறுப்பினராக்குவதற்கு எடுக்கும் முதல் நிகழ்வே திருமுழுக்கு ஆகும். அதன் பின்னரே தொடர்ச்சியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— காலப் போக்கில் தேவைக்கு ஏற்ப ஏனைய பல அருட்சாதனங்களைப் பெற வாய்ப்புக் கிடைக்கிறது.

ஆரம்ப காலத்தில் - அறியாப் பருவத்தில் மழலை நிலையில் உரிமைப் பெற்றார் - ஞானப் பெற்றார் என்பவர்களின் துணையோடு இந்த அருட்சாதனம் கிடைக்கப் பெறுகிறது. ஆயினும் பிள்ளை வளர்ச்சி பெற்ற பின் பெற்றோரால் - மறைக்கல்வி ஆசிரியர்களால் ஞான முழுக்கின் தன்மையை — அதன் விபரத்தை அறியப் பண்ணுவதன் மூலம் பிள்ளை முழுமை அறிவைப் பெற்றுக் கொள்கிறது.

இப்போது பரவலாக 'தூய ஆவி' ஆனவரைப்பற்றி விரிவான விளக்கங்களும் அவர் பற்றிய விரிவான ஆடல் பாடல் நிரம்பிய மன நிறைவு வழிபாடுகளும். அனைத்து ஆலயங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருப்பதை நாம் அறிவோம்.

தமது வாழ்வு நெறியின் வழிகாட்டலாக இன்று ஆவி வழிபாடு நிலைபெற்று வருவது ஒரு மகிழ்ச்சியான செய்தியாகும்.

ஆவியானவரே நம் வாழ்வின் துணைவர் என்பதை நாம் கண்டு உணர்ந்து கொள்வதோடு அதனை ஏனையவர்களுக்கும் பகிரங்கப்படுத்த நாம் முனைய வேண்டும்.

இதனை அனைத்து கிறிஸ்தவர்களும் மேற்கொள்ள — நடைமுறைப்படுத்த தூய ஆவியானவர் தாமே உங்களுக்குத் துணையாக அமைய வேண்டும் என்று மன்றாடுகிறோம்.

- எப். எஸ் . அஞ்சலின் -

## நம்மைக்குறை கூறுவோரே நமது முன்னேற்றத்தின் பங்காளிகள்!

நாம் என்ன சொன்னாலும் மற்றவர்கள் மறுப்புச் சொல்லாமல் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கிறோம். அவ்வாறு கேட்பவர்கள் தான் நமக்கு நெருங்கிய நண்பர்களாகவும், அபிமானத்துக்குரிய நபர்களாகவும் இருப்பார்கள். ஆனால் உண்மை என்ன தெரியுமா? அவ்விதம் நமக்குப் பக்கபாட்டுப்பாடும் நண்பர்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு எவ்வித நன்மையுமில்லை. பொதுவாக நமது கருத்துக்கு மாற்றுக்கருத்துச் சொல்பவர்களை நமக்குப் பிடிப்பதில்லை. ஆனால் உண்மை என்னவென்றால் நமது பேச்சுக்கு எதிர்ப்பேச்சு பேசுபவர்களும், நம்மை பற்றி விமர்சனம் செய்வர்களுமே நமது முன்னேற்றத்திற்கு உதவுவர்களாக இருப்பார்கள். அவர்களிடமிருந்து தான் நாம் நமது முன்னேற்றத்திற்கான பல புதிய விடயங்களைக் கற்றுக் கொள்கிறோம்.

அதனால், இனி உங்கள் கருத்துக்கு எதிர்க்கருத்துச் சொல்பர்களை எதிரிகளாக நினைக்காதீர்கள். அவர்கள் மூலம் உங்களிடமிருக்கும் குறையென்ன, நீங்கள் மாற்றிக் கொள்ள வேண்டிய கருத்துக்கள், பாவனைகள் என்ன, அவர்களிடமிருந்து எதனைக் கற்றுக்கொள்ள முடியும் என்பவைகளை ஆராய்ந்து உங்கள் குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளுங்கள். அப்போது தான் உங்களை மென்மேலும் உயர்த்திக் கொண்டு முன்னேறமுடியும்.

ஆகவே இனியும் உங்களைக் குறை கூறுபவர்களைப் பார்த்து கோபப்படாமல், எதிரிகளாக எண்ணாமல், அவர்கள் கூறும் கருத்துக்களுக்கு நன்றி சொல்லப்பழகுங்கள்!

## கண்களை விற்று சித்திரம் வாங்க வேண்டாம்!

இந்தக்காலத்தில் வாழ்க்கையில் வெற்றி என்பது சேர்த்து வைக்கும் செல்வத்தையும், சொத்துக்களையும் வைத்தே தீர்மானிக்கப்படுகிறது. நிறையச் சம்பாதிப்பவன், அல்லது நிறைய சொத்துப்பத்துக்களை சேர்த்து வைத்திருப்பவன் வாழ்க்கையில் வெற்றி பெற்றவனாகவும், அதிர்ஷ்டசாலி என்றும் கருதப்படுகின்றான். அதனால்தான் வாழ்க்கையின் ஓட்டம் வாழ்வதற்கான நோக்கம் அத்தனையும் பணம் சேர்ப்பதற்கான ஓட்டமாகிவிடுகிறது.

நமக்கு வேண்டியளவு காசு இருந்தாலும், நமது தேவைகளைப் பூர்த்தி செய்யுமளவுக்கு செல்வம் இருந்தாலும், அதைவிட அதிகமாக சம்பாதிப்பவனையும், சேர்த்து வைத்திருப்பவனையும் பார்த்தால் நம் மனத்திருப்திகாணாமல் போகிறது. நம்மைவிட அதிகமாக உலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை மதித்தால் வாழ்க்கையின் ஓட்டத்தில் நாம் பின்தங்கிவிட்ட பிரமை நமக்கு ஏற்பட்டு விடுகிறது. உடனே நமது வேகத்தை இரட்டிப்பாக்கி நாமும் ஓடி அவனை முந்தப்பார்க்கிறோம். அப்படி முந்திவிடும் போதாவது திருப்தியடைந்து நின்று விடுகிறோமா என்றால் அதுவுமில்லை. அந்தநேரத்தில் நம்மை முந்திச்சென்று கொண்டிருக்கும் இன்னொருவன் நம் கண்ணில் படுகிறான். உடனே வேகத்தை அதிகப்படுத்துகிறோம். இந்தப் பைத்தியக்கார ஓட்டம் கடைசிவரை நிற்பதேயில்லை.

பசிக்கிற அளவுக்கு சாப்பிடுவதுதான் இயற்கை. அதுவே தேவையும் கூட. ஆனால் அதிகமாக சாப்பிடுகிறவனைத்தான் எல்லோரும் பாராட்டுகிறார்கள் என்ற ஒரு நிலை இருந்து, அதற்காக புராண காலத்துக்குண்டோதரன் போல அசுரப்பசியை ஏற்படுத்திக் கொண்டு, அதைத் தீர்க்க சாப்பிட்டுக்கொண்டேபோனால் அஜீரணமும் வாந்தியும் பேதியும் ஏற்பட்டு, அதனால் தீராத வியாதிகள் உருவாவது மட்டுமல்லாமல், உலகமாயைகளில் சிக்கி நாம் ஒரு வடிகட்டிய முட்டாளாகவும் நடந்து கொள்கிறோம் என்பதும் நமக்குப் புரியலாம், ஆனால் இதையே நாம் வேறு பல விஷயங்களில் செய்கிறோம் என்றாலும், அதிலுள்ள முட்டாள்தனம் நமக்குப் புரிவதில்லை.

செல்வம் மிக முக்கியமானதுதானே, நமது வாழ்க்கைக்கு ஆதாரமும் அதுதானே, அப்படியிருக்கையில் அதிகமாக அதைத்தேடி அடைவதுதானே வெற்றி; அதுதானே புத்திசாலித்தனம் என்று நீங்கள் கேட்கலாம். அவையெல்லாம் நியாயமானவை என்றும் விவாதிக்கலாம்.

செல்வம் தேடுவது தவறல்ல, அதை அதிகமாக தேடி அடைவதும் பிழையல்ல, தவறு எங்கே நிகழ்கிறது தெரியுமா? அதற்கு நமது வாழ்க்கையில் நாம் தரும் விலையில்தான்!

உதாரணத்திற்கு ஒரு நடுத்தர வர்க்கத்து இளம் தம்பதியினரை எடுத்துக்கொள்வோம். அந்த இருவரும் கம்பியூட்டர் எஞ்சினியர்கள். காலையில் இருந்து இரவு வரை வேலைபார்க்கிறார்கள் கை நிறைந்த சம்பளம். சமைக்க வீட்டில் ஆளிருக்கிறது. குழந்தையைக் கவனித்துக் கொள்ளவும் ஆயா இருக்கிறாள் சம்பாதித்து ஒரு வீடும் வாங்கியாகிவிட்டது. ஆளுக்கொரு காரும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாங்கியாவிட்டது. விடுமுறை நாட்களில் குழந்தையைக் கூட்டிக்கொண்டு வெளியே எங்கேயாவது பிக்னிக் போகிறார்கள். இரவு திரும்புகிறார்கள். விடுமுறை முடிந்து மறுநாள் பழையபடி ஓட்டம் ஆரம்பிக்கிறது. அடுத்த விடுமுறை தினம் வரும்வரை இதே ஓட்டம் தொடர்கிறது.

இருவரும் இவ்விதம் கடுமையாக உழைப்பதால்தான் ஒரு சர்வதேச பாடசாலையில் அதிகமான கட்டணம் செலுத்தி பிள்ளையைப் படிக்க வைக்க முடிகிறது. அவ்வப்போது பெரிய ஹோட்டல்களுக்குச் சென்று சாப்பிட முடிகிறது. விலையுயர்ந்த உடைகளையும் ஆடம்பரப் பொருட்களையும் வாங்க முடிகிறது. வருடத்திற்கு ஒரு முறையாவது உறவினர்கள், நாண்பர்கள் வாழும் வெளிநாடுகளுக்கு சுற்றுலா போய் வரமுடிகிறது. இதெல்லாம் அதில் பெற முடிகிற அனுகூலங்கள்.

சரி, இதற்காக அவர்கள் எதையெதையெல்லாம் விலையாகத்தருகிறார்கள் என்று பார்ப்போம்.

பணம் சம்பாதிக்கும் ஓட்டத்தில் முதல் பலி அவர்களது உடலாரோக்கியம். உடற்பயிற்சி செய்யவோ நடக்கவோ நேரமில்லை. அதனால் படிப்படியாக ஆரோக்கியம் குறைந்து கொண்டே வருகிறது. குழந்தையை தங்களது நேரடிக்கவனத்தில் வைத்துப் பார்க்கநேரமில்லை. அதனுடன் செலவழிக்கும் நேரமும் குறைவு. அதனால் குழந்தையின் படிமுறை வளர்ச்சியின்போது அதனை ரசிக்கவே முழுமையாக புரிந்து கொள்ளவே முடிவதில்லை, மாலை 4 மணிக்கு மேல் வீடுவந்து சேரும் பிள்ளை டி.வி. பார்த்துக்கொண்டோ வீடியோ விளையாட்டுக்களிலோ பொழுதைப்போக்கும். இல்லாவிட்டால் டியூசன் போகும், சாவககசமாக அதனுடன் இருக்கவோ நெருங்கிப்பழகவோ புரிந்து கொள்ளவே நேரமில்லை அதனால் குழந்தை வளர வளர அதனுடன் பெற்றோருக்குள்ள இடைவெளியும் அதிகரிக்கிறது. உறவினர்கள, நண்பர்களுடன் நெருங்கியிருக்கும் சந்தர்ப்பம் குறைவு. உண்மையான எத்தனையோ திறமைகள் வேறு இருக்கக்கூடும். இசை, நடனம் விளையாட்டு என்று இயல்பான திறமைகளும் இருக்கக்கூடும். அவைகளில் ஈடுபடவோ, வளர்த்துக் கொள்ளவோ, அதில் நிறைவு காணவோ நேரமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் உடல் ஆரோக்கியம் முழுவதும் கெட்டு டாக்டாகளிடம் அடிக்கடி ஓட நேர்கிறது. மருந்துக்கும் மருத்துவத்திற்கும் நிறையச் செலவு செய்ய வேண்டி வருகிறது பிள்ளை நெருக்கமாக இருப்பதில்லை. நெருங்கிய உறவுகளும் தூரப்பட்டு விடுகிறார்கள். டென்ஷன், டென்ஷன் என்று அது நாள்வரை ஓடிய ஓட்டத்தில் மனதை அமைதிப் படுத்திக்கொள்ள எதுவுமே செய்ய நேரமிருக்காததால் மன நிலையிலும் நிறைய பாதிப்புகள் இருக்கின்றன.

மொத்தத்தில் பணமும் பொருளாதார வசதிகளும் இருக்கின்றன.

ஆனால் ஆரோக்கியமுமில்லை. நிம்மதியுமில்லை. நேசிக்கும் ஆட்களுமில்லை. கைகொடுக்கும் உறவுகளுமில்லை. இந்நிலையில் இப்போதும் வெளியே இருந்து பார்ப்பவர்கள் பொருளாதார நிலையை மட்டும் பார்த்து இவர்களை வாழ்க்கையில் வெற்றியடைந்தவர்கள் என்று சொல்லலாம். இதுதான் வெற்றியா? உயிர் வாழ எல்லாம் இருக்கிறது. ஆனால் நல்ல உணர்வுகளுடன் வாழ, மன நிறைவுடன் வாழ ஏதாவது இங்கே உள்ளதா? என்னவிலை கொடுத்து இவர்கள் எதைப்பெற்றிருக்கிறார்கள்?

இந்த உதாரணத்தில் பணமும் தனிமையும் இருப்பதால் கெட்டுப்போக முடிந்த குழந்தைகளையும் பிள்ளைகளும் பற்றிச் சொல்லவில்லை. தேவைப்படுகிற நேரங்களில் பெற்றோரில் ஒருவர் கூட அருகில் இருக்காததால் குழந்தைகளுக்கு ஏற்படும் மனரீதியான நஷ்டங்களைப் பற்றிச் சொல்லவில்லை, அதேபோல வயதுபோன பெற்றோர் தனிமைப்படுத்தப்படுவதைக்கூட சொல்லவில்லை. அவற்றையெல்லாம் சேர்த்துப்பார்த்தால் நிலைமை இன்னும் பூதாகரமாய்த் தெரியும். நரகம் என்பது வேறெங்குமில்லை. அந்த வீடு தான் என்று சொல்லத்தோன்றும்.

ஆரோக்கியத்தை இளமையில் அலட்சியப்படுத்தி ஓயாமல் சம்பாதித்து, 40 வயதைத்தாண்டிய பிறகு சம்பாதித்ததையெல்லாம் மருத்துவத்திற்குச் செலவு செய்வதுடன் உடல் உபாதைகளையும் தாங்கி அவதிப்படுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டென்ஷனுடன் கஷ்டப்பட்டு சம்பாதித்து விலையுயர்ந்த பொருட்களை வீட்டில் சேர்த்து வைத்து, நிம்மதியை தொலைத்து விட்டால், அந்த வீட்டில் நிறைவுடன் நம்மால் வாழ முடியாவிட்டால் அந்த வாழ்க்கையில் வெற்றி என்ன இருக்கிறது?

மொத்தத்தில் கண்களை விற்று சித்திரம் வாங்கி என்ன சாதிக்கப்போகிறோம்? எப்படி ஆனந்தப்படப்போகிறோம்.?

வாழ்க்கையில் பணம், உடலாரோக்கியம், மனநலம் மூன்றுமே சமஅளவில் முக்கியமானவை. அதில் ஏதாவது ஒன்றை மட்டும் சம்பாதித்து மற்ற இரண்டையும் அலட்சியம் செய்தால் அது குறைபாடான வாழ்க்கையாகவே இருந்து விடும். அதில் உண்மையான மகிழ்ச்சியையும் நிறைவையும் நாம் காண முடியாது.

ஆனால் இந்தக்காலத்தில் பணம் ஒன்று மட்டுமே வெற்றியையும் மகிழ்ச்சியைய்யும் தந்துவிடும் என்று நம்பி ஏமாறுகிற போக்கையே நாம் அதிகம் காண முடிகிறது. இது கண்களை விற்று சித்திரம் வாங்கும் போக்குத்தான். எனவே இந்த மூன்றுக்கும் சமமான முக்கியத்துவத்தை இளமையில் இருந்தே தரும் மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். கண்டிப்பாக நிறைவான வாழ்க்கையை வாழ்வீர்கள்.!

– எஸ். ஜோன்ராஜன் –

## "மறைக் கல்வியை முறையாக பயில்வீர்"

"பிள்ளைகள் ரீ.விய நிப்பாட்டிப்போட்டு போய் படியுங்கோ! சோதின கிட்டடியில வரப்போகுது! இப்படிப்படிச்சால் என்னெண்டு திறமைச் சித்தி வரப்போகுது!"

"நாங்கள் படிச்சுக் கொண்டுதான் ரீவியும் பார்க்கிறம் அப்பா!" அப்பா அலெக்ஸ்சாண்டர் அப்போது தான் கவனித்தார், மூன்று பிள்ளைகளின் மடியிலும் புத்தகங்கள் இருந்தன! முன்னால் படக்காட்சி ஓடிக்கொண்டிருந்தது!

"இதுகும் ஒரு படிப்பா! இப்படிப்படிச்சா மண்டையில் ஏறுமா?இது படிக்கிறமாதிரி நடிக்கிற வேலை!.......... எங்கட காலத்தில கதவு யன்னல் எல்லாம் பூட்டிப்போட்டு ஒருசத்தம் இல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்துதான் படிச்சம்! அப்படிப் படிச்சதாலதான் இண்டைக்கு நல்ல உத்தியோகத்தில இருக்கிறம்!" என்று சொன்ன வங்கி முகாமையாளரான அலெக்ஸ்சாண்டர் தொலைக்காட்சியை நிறுத்திவிட்டார்! பிள்ளைகள் மூவரும் தலை கவிழ்ந்தனர். படிக்கவோ சோகத்தாலோ புரியவில்லை.

சிறிது நேரம் தான் சென்றிருக்கும் உள்ளே இருந்து அம்மா வந்தா. சுவரில் நேரத்தைப்பார்த்தார். தொலைக்காட்சியை முடுக்கிவிட்டார் பிள்ளைகளின் முகம் மலர்ந்தது!

ஆனால் அப்பாவின் குரல் அதிர்ந்தது! "நீ இப்படிப்படிச்சா ஒரு ரீச்சராக வந்தநீ? எங்கள விட எங்கட பிள்ளைகள் நல்ல நிலையில் இருக்க வேணும் எண்டுதான் நான் பாடுபடுறன்! அப்படியொரு இலட்சியக் கனவு உமக்கு இல்லையா? பேய்களாய் பிள்ளைகள் திரியுறது உனக்கு விருப்பமா? நான் நிப்பாட்ட நீ ஏன் திறந்து விட்ட நீ?.

"நான் தொடர் நாடகம் பார்க்க வேணும்! இந்த நேரத்ததவற விட்டால், பிறகு எனக்காகப் போட்டுக் காட்டுவாங்களோ சொல்லுங்க பார்ப்பம்? மாமி மருமகள் சண்டை நடந்து கொண்டிருந்தாற் போல நேற்று நிப்பாட்டிப் போட்டாங்கள்! இண்டைக்கு ஆர்ர கை ஓங்கிற்றென்று கட்டாயம் பார்க்க வேணும்!' போய் உங்கட வேலயப் பாருங்க!"

"பிள்ளைகளத் திருத்த முதல் உன்னத் திருத்த வேணும்! நீ திருந்தாம பிள்ளைகள் திருந்தாது! கெதியா ரீ வியப் பூட்டு!...

"எங்கட காலம்மாதிரி இல்ல இப்பத்தயக்காலம்! இப்பத்தயப் பிள்ளைகளுக்கு கொம்பியூட்டர் மூளை! தசாவதானம் இருக்கு! ரீ வியையும் செல்போனையும் கண்ணவைச்சாத்தான் அதுகளுக்கு படிக்க ஏலும்! நீர் போய் உம்முடைய வேலயப்பாரும், எல்லாம் எனக்குத் தெரியும்! உம்முடைய அதிகாரத்த ஒப்பீசில வைச்சுக் கொள்ளும்'. வீட்டுக்கு நான் தான் அரசி! இல்லத்தரசி எண்டு சும்மாவா சொல்லுறவங்கள்?

"கனக்கையாக் கதைச்சியெண்டால் அடிச்சு பல்லுக்கில் லெல்லாம் பேத்துப் போடுவன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்க அடிபாப்பம்! நீ வீட்டில பெரிய சீர் திருத்தம் பேசுறாய்! அங்க ஒப்பீசில அடிக்கிற கூத்து கொஞ்சமா? நீ ஒப்பீசில அவள் நிர்மலா எண்ட ரைப்பிஸ்ரோட அடிக்கிற கூத்து எங்களுக்குத் தெரியாதெண்டா நினைச்சாய்? "

"அடிச்சு நொருக்கிப்போடுவன் எல்லாத்தையும், கனக்கையாக கதைச்சியெண்டால்! " என்று அலெக்ஸ்சாண்டர் கையை உயர்த்திக் கொண்டு நெருங்கினார் மனைவியை. பிள்ளைகளும் பயப்பீதியால் மிரண்டனர்!.

அப்போது வெளிப்படலையைத் தட்டும் சத்தமும், கூப்பிடும் சத்தமும் கேட்டது! இங்கே திடீர் அமைதியாயிற்று! எதுவுமே நடக்காதது போல மாறிற்று! இருவர் வந்து கொண்டிருந்தார்கள். ஒருவர் அருட்சகோதரி. மற்றவர் ஒரு மறைஆசிரியர்.

இவர்களைக் கண்டதும் மரியாதை கொடுத்து வரவேற்றனர்! வீட்டில் நடந்தது இவர்கள் காதுக்கு எட்டியிருக்குமோ என்று பயந்தனர்! என்றாலும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை முகம் மலர்ந்தே இருந்தனர்!.

அமர்ந்திருந்த அருட்சகோதரியை வீட்டுக்காரர் விழிபிதுங்கி பார்த்துக் கொண்டிருந்தார்!....... ஏன் வந்தார்? என்ன சொல்லப்போகிறார்!.

அருட்சகோதரியை முந்திக்கொண்டு மறை ஆசிரியை நேரடியாகவே விசயத்துக்கு வந்தார்.

"நாங்கள் ஞாயிற்றுக் கிழமையில மறைக்கல்வி வகுப்பு நடத்துறது உங்களுக்குத் தெரியாதா? உங்கட பிள்ளைகள் ஒருநாளும் வகுப்புக்கு வாற இல்ல! ஏன்? நாங்கள் என்ன ரியூசன் சென்ரர்கள் மாதிரி காசு வாங்கியா இதுக்காக மினக்கெடுறம்? ஏன் அனுப்புற இல்ல?

அலெக்ஸ்சாண்டர்தான் தொண்டைக் கரகரப்பை செருமி எடுத்துக் கொண்டு பேசினார். "அது பாருங்கோ, அவங்களுக்கு சோதினை நெருங்குது நல்லா படிக்க வேணும் ரியூசனுக்கு கட்டாயம் போகவேணும்; வீட்டில இருந்தும் ஆயத்தம் செய்ய வேணும்! கோவிலுக்கும் மறைக் கல்விக்கும் எண்டு திரிஞ்சால் பரீட்சையில் கோட்ட விட்டுருவாங்க, அதனால்தான் அங்கெல்லாம் விடுகிற இல்ல பாருங்க...!

இப்போது அருட்சகோதரி பேசத்துவங்கினார் ........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கல்வியில இரண்டு கல்வி இருக்கு பாருங்கோ, ஒண்டு எப்பிடி பிழைக்கிறது எண்டத சொல்லித்தாறது. மற்றது எப்படிவாழ்றது எண்டத சொல்லித்தறாது.. நீங்கள் எல்லாம் முதலாவத எடுத்துக்கொண்டு மற்றத புறக்கணிக்கிறீங்க! ...... நீங்கள் பிள்ளைகளைப் படிப்பிக்கிறது சோதினை எழுதி திறமாக சித்தியடைய வேணும் எண்டு எதிர்பார்க்கிறது ஏன் என்றால்: பட்டம் பெற வேணும், செல்வாக்குப் பெறவேணும், பெருத்த உத்தியோகங்களைக் காட்டி கொழுத்த சீதனத்தோட கலியாணம் முடித்து பெருமையாக வாழ வேணும் எண்டுதான் எதிர்பார்க்கிறீங்க! விஞ்ஞானம் படிக்கிறாங்க, கணக்கியல் கொம்பியூட்டர் கலைப்பிரிவு என்று ஏதேதோவெல்லாம் படிச்சு பட்டங்களையும் பெற்று பெரிய உத்தியோகங்களையும் பெற்று நல்லவருமானத்தோட ஆடம்பரமாக வாழ்றாங்கள்தான். ஒருகுறையும் இல்லாமல் வாழ்றது மாதிரித்தான் கண்ணுக்குத்தெரியுது!

ஆனால் இப்பிடிப்படிச்ச உத்தியோகம்பார்கிற குடும்பங்களை நிம்மதி இல்ல! கணவனை மனைவி மதிக்கிறதில்ல, கணவன் குடும்பத்துக்கு விசுவாசமாக நடக்கிற இல்ல, வீட்டில அதிகாரம், அட்டகாசம்! அன்பாக கருணையாக பேசிபழகுகிறதில்ல, பிள்ளைகள் தாய்தகப்பனுக்கு விசுவாசமாக இல்லாமல் எங்கேயோ போகிறார்கள்! மொத்தத்தில் குடும்பங்களில் எவ்வளவு படித்தாலும் பட்டம்பெற்றாலும் உத்தியோகம் பார்த்தாலும் செல்வம் செல்வாக்கு எல்லாம் இருந்தாலும் மனதில் வீட்டில் நிம்மதி இல்லை!

இதற்குக் காரணம், கடவுள் போதனையை – மறைக்கல்வியை திரும்பியும் பார்க்காமல் மறைத்து வாழ்வதே காரணம்! என்ன படிப்புப் படித்தாலும், கணவன் மனைவிக்கு ஒருவரை ஒருவர் மதித்து வாழத் தெரியவில்லை! அயலாரோடு மரியாதையாக கதைக்க பேச ஒத்தாசையாக நடக்கத்தெரியவில்லை! பிள்ளைகளும் பெற்றோருக்கு விரோதமாக வேறுதிசையில் பயணிக்கின்றனர்! எங்கும் போட்டியும் பொறாமையும் தான் தலைவிரித்தாடுகிறது! ஆளுக்காள் குழிபறித்து முன்னேற வழிதேடுகின்றனர்!.....இந்தத்துன்பங்களில் இருந்து கடைத்தேறி இவ்வுலக வாழ்வில் அன்பாக, நீதியாக, சமாதானமாக வாழ்ந்து, அதன் பலனால் நித்திய பேரின்ப வாழ்வை நீங்கள் எல்லாம் பெற வேண்டும் என்பதற்காகவே இறைவனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாட்சியாக நாங்கள் இருந்து மறைக்கல்வியை நடத்துகிறோம்! உங்கள் பிள்ளைகளை கட்டாயம் அனுப்பிவையுங்கள், எங்களுக்காக அல்ல, உங்களுக்காக!

- ஆக்கம்: - சூசை எட்வேட் -

## உறவு என்பது மற்றவரை மதித்தல்

மனித உறவுகளைப்பற்றி எழுதும் அறிஞர்கள், முக்கியமான மூன்று குறைபாடுகள் உறவுக்குக் குந்தகமாக குறுக்கே நிற்பதாகக் குறிப்பிடுகின்றனர்.

பிறர் சொல்வதை நாம் கவனமாக காது கொடுத்துக் கேட்பதில்லை; பிறர் சொல்வதன் முழு அர்த்தத்தையும் நாம் விளங்கிக் கொள்வதில்லை.; நம்மால் தவறு ஏற்படும்போது அதை நாம் உடனே ஏற்றுக் கொள்வதில்லை, இவைதாம் அந்த மூன்று குறைபாடுகளுமாகும்.

சரியான கருத்துப் பரிமாற்றம், ஒரு மனம் திறந்த பேச்சு வார்த்தை இருக்கும்போதுதான் ஒரு குடும்பம் சந்தோஷமாக இயங்குகிறது, ஒரு நிறுவனம் திறமையுடன் நடக்கிறது, ஓர் ஆட்சி நாட்டுக்கு நலன்களை நல்கிறது.

நாம் எதிர்பார்க்கும் விதமாக பிறரை உருவாக்க முயல்வது உறவல்ல; அது மகன் என்றாலும் சரிதான், மனைவி என்றாலும் சரிதான்.; உறவு என்பது பிறரது தனித்தன்மையை மதிப்பதில் இருக்கிறது!

நமது சமூகத்தில், வீட்டு வேலைகள் எல்லாவற்றையும் மனைவியே செய்ய வேண்டுமென ஆண் வர்க்கம் எண்ணப் பழகியிருக்கிறது மனைவியென்பவள் நல்ல சினேகிதி, நல்ல மந்திரி, நல்ல தாசி நல்ல தாய், என்று வக்கணையாய்ப் பேசி பெருமைப்படுத்துவதன் மூலம் தமது அநீதிகளை, ஆண்வர்க்கம் நியாயப்படுத்துகிறது..

என்ன இருந்தாலும் அவள் என் மனைவிதானே என்று அலட்சியப்படுத்தாதீர்கள். நான் பெற்ற பிள்ளைதானே என்று கேவலமாய் எடுத்தெறிந்து பேசாதீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நம்மிடம் வேலை செய்பவன்தானே' என்று செய்ய முடியாத வேலைகளைச் செய்யச் சொல்லியும், சுமக்க முடியாத சுமைகளை சுமக்கச் சொல்லியும் கொடுமைப்படுத்தாதீர்கள். வண்டி ஓடத்தில் ஏறும் அதேபோல ஒரு நாள் ஓடமும் வண்டியில் ஏறும். நமக்குப் பலபடிகளில், பல நிலைகளில் கீழே இருந்தவர்கள் காலகதியில் நமக்கும் மேலே முக்கிய பதவிகளுக்கு உயர்வது நமக்கு கண்கூடான காட்சியாக இருக்கிறது.

எந்த ஒருவிடயமும் நமக்கு எவ்வளவு கோபத்தை அல்லது மாறுபட்ட உணர்வை எழுப்பினாலும், அதற்கு .இன்னொரு பக்க நியாயமும் இருக்கலாம் என்று கருதும் ஒரு பெருந்தன்மை, அல்லது மன்னிக்கும் மனோபாவம் நம்மிடம் இருக்க வேண்டும்.

அடுத்து, உறவுகளில் நாம் சகஜமாகக் காணக்கூடிய ஒரு தன்மை இருக்கிறது. உதாரணமாக மிகக் கஷ்டப்பட்டு, அவர் இவரது கையைக்காலைப் பிடித்து ஒரு நிறுவனத்தில் வேலை பெற்றிருப்பார்கள். சுமார் ஆறு மாதம் அல்லது ஒரு வருடம் போல தாம் அங்கே வேலை பார்ப்பது பற்றி பெருமையுடன் மற்றவர்களிடம் கூறுவார்கள். அதன் பின் என்றாவது ஒரு நாள் தன் மேலதிகாரி லீவு தர மறுத்தார். கடன் பெற அனுமதிக்க மறுத்தார் என்பதை வைத்துக் கொண்டு அந்த நிறுவனத்தைப் பற்றி குறைகூறத் தொடங்குவார்கள்.

இப்படிப்பட்ட ஒருவர் அந்த நிறுவனத்திலிருந்து விலகும் நாள் - ஏன், விலக்கப்படும் நாள் அதிக தூரத்திலில்லை. ஏனென்றால் நமது அதிருப்தி அதன் பலனைக் கெடுத்துவிடும். நமது வெறுப்பும் குறை கூறலும் மூடிவைக்க முடியாத விடயங்கள். எந்த நிறுவனம் நமக்குச் சோறு போடுகிறதோ, எந்த நிறுவனத்தின் உப்பைத்தின்று நாம் சீவனம் நடத்துகிறோமோ, அதற்கு நம்பிக்கைத்துரோகம் செய்யாதீர்கள். கூட இருந்து குழிபறிப்பதைப் போன்று ஒரு கேவலமான செயல் வேறு கிடையாது.

கடைசியாக ஒரு சிறு சம்பவத்தைச் சொல்லி முடிக்கிறேன். கொழும்பில் எனது உறவினரொருவர் வீட்டுக்குப் போயிருந்தேன். கொழும்பிற்கு வந்தால் ஒரு நாளாவது தனது வீட்டில் தங்கிவிட்டுப்போகுமாறு சொன்னார். நான் வந்த வேலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாவிட்டால் அன்றிரவு எப்படியும் உங்கள் வீட்டில் வந்து தங்குகிறேன் என்று கூறி அவரிடமிருந்து விடைபெற்றேன். எதிர்பார்த்ததுக்கு மாறாக அன்று என் வேலை சீக்கிரமே முடிந்து விட்டது. அவர் வீட்டுக்கு மறுபடியும் போய் அவரிடம் சொல்லி விடைபெற்று வர நேரமில்லை. எனவே தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது வீட்டில் அவர் மனைவிதான் இருந்தார். கணவன் வெளியே போயிருப்பதாகச் சொன்னார். எனவே என்னால் அன்றிரவு வந்து தங்க முடியவில்லையென்பதை அவரிடம் சொல்லுமாறு மனைவியிடம் சொன்னேன்.

எனது மறுபயணத்தில் நான் கொழும்பு சென்றபோது அந்த உறவினர் வீட்டில் தங்கலாமென்று போனேன். அவர் அங்கு இல்லை. சில நாட்கள் முன்பு தான் காலமாகியிருந்தார். அவரின் மனைவி என்னை உபசரித்த வண்ணம் "சென்றமுறை உங்களைத்தங்கிச் செல்லுமாறு சொல்ல ஐயா இருந்தார். இன்று அவர் இல்லையே ஐயா?" என்று கண்ணீர் சிந்தினார். என் கண்களும் கலங்கிப் போயின. எனவே நண்பர்களே, மனித உறவுகள் மென்மையானவை. மெல்லியவை. எனவே யார்யாருக்கு அன்பு காட்ட முடியுமோ, நல்லவார்த்தை சொல்ல முடியுமோ, உதவ முடியுமோ அதை அவர் இருக்கும் போதே, சந்தர்ப்பம் கிடைக்கும் போதே, செய்து விடுங்கள்.

– சாமந்தி –

## "என் அழுகை உன்காதில் விழவேண்டும்"

கிழக்கிலங்கையின் பண்பாடு, கலாசாரம் போன்ற பாரம்பரியங்களின் மிச்சம் மீதிகள், இப்போது நகரங்களின் ஆரவாரங்களிலிருந்து இன்னமும் ஒதுங்கியிருக்கும் கிராமப்புறங்களில் வாழ்வதாக சொல்லப்படுகிறது. யுத்தத்தின் பிணவாடைக்கு மத்தியிலிருந்தும் தனித்தன்மை வாய்ந்த அக்கிராமிய மணம் இன்னமும் கமழ்ந்து கொண்டிருப்பதுதான் வியப்புக்கும் மகிழ்ச்சிக்குமுரியது. அக்கிராமங்களில் ஒன்றைச் சேர்ந்த ஒரு பருவக்குமரி, ஏழையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தன் தந்தையிடம் கெஞ்சிக் கேட்டுக்கொள்வதாக கீழேயுள்ள கவிதை அமைந்திருக்கிறது. திருமணத்தின் பின்னே ஒவ்வொரு பெண்ணின் வாழ்க்கையுமே புலம்பெயர்ந்த வாழ்க்கைதானோ என்று எண்ண வைக்கின்றன இக்கவிதை வரிகள்.....................

"அப்பா
உன் ஆடுகளை விற்றுத்தான்
என்னைப்பார்க்க வரமுடியும்
என்ற தொலைதூரத்தில்
என்னைக் கட்டிக் கொடுக்காதே!

எண்ணங்களைவிட கார்கள்
வேகமாகப் பறக்கும் இடத்தில்
உயர் கட்டிடங்களும்
பெரிய கடைகளும்
உள்ள இடத்தில் வேண்டாம்!
நீ காலையில் வந்து
சாயந்தர நேரத்தில் நடந்தே
தீரக்கூடிய இடத்தில்
எனக்குத்
திருமணம் செய்து வை!
இங்கே நான்
ஆற்றங்கரையில் அழுதால்
அக்கரையில் உன் காதில் பட்டு
நீ வரவேண்டும்!'.

**- திருவோணம் -**

**பகையும் உறவும்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்தவ குடும்பம் வளமடைய திருவிவிலியத்தில் நாம் காணும் சில சிந்தனைகள்

- "ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத, மனிதன் உயிர் உள்ளவன் ஆனான்" (தொநூ 2: 7).

* உயிரை கொடுக்கும் உரிமையும் அதை எடுக்கும் உரிமையும் கடவுள் ஒருவருக்கே உண்டு.

- கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி, "பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்" என்றார், (தொநூ 1:28).

- மக்கட்பேறு என்பது கடவுள் மனிதனுக்குக் கொடுத்த கட்டளை.
- காலப்போக்கில் மலட்டுத் தன்மை என்பது கடவுளால் ஒருவருக்குக் கொடுக்கப்படும் தண்டனை அல்லது சாபம் என யூத சமூகம் கருதியது குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களை தூற்றியும் வந்தது.
- குழந்தைப் பாக்கியமே இல்லாத ஆபிரகாம் சாராள் தம்பதிக்கு குழந்தை பெறும் பாக்கியம் கொடுத்தவர் கடவுள்.
  ஆபிரகாம் மூலமாக புதிய இனமே உருவாகியது.
- மலடியாக இழிவுநிலைக்கு உள்ளான எல்கானாவின் மனைவி அன்னாவின் செபத்திற்கு ஆண்டவர் செவிமடுத்து சாமுவேலைப் பிறக்கச் செய்து அவரது துன்பத்தைப் போக்கினார்.
  சாமுவேல் சவுலை அபிஷேகம் செய்ய யூதரிடையே அரசாட்சி ஆரம்பமானது. குழந்தையில்லாமல் தவித்த எலிசபெத்தை ஆண்டவர் ஆசீர்வதித்து, திருமுழுக்கு யோவானை பிறக்கச் செய்தார்.
  திருமுழுக்கு யோவான் இயேசுவிற்கு முன்னோடியாக வந்தார்.
- மரியாவை உரிய காலத்தில் அழைத்த ஆண்டவர், இயேசுவை பிறக்கச் செய்தார்.
- இயேசுவே உலக மீட்பராகி அனைவருக்கும் வாழ்வு தந்தார்.
- இறைவனின் திட்டங்களை நாம் முழுமையாக அறிய முடியாது. உயிர் தருவதும் அதை எடுப்பதும் அவரது விருப்பம். ஆயினும் எது நடந்தாலும் ஆண்டவர் அனைத்து சம்பவங்கள் மூலமாகவும் தனது திட்டங்களை நிறைவேற்றுகின்றார் என்பதில் நாம் நம்பிக்கை வைக்க வேண்டும். அப்போது எமது நிலை எதுவாக இருந்தாலும் இறைவனில் நாம் மகிழலாம்.

**– அருட்தந்தை நோயல் இம்மானுவல் –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org